# திருத்தொண்டர் காப்பியக் கூறுகள்

*முனைவர் ஜெ. ஜெயசாந்தி*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை

*கிறித்தவ சமயச் சான்றோராகிய இன்னாசியால், திருமறைக்காகத் தன் இன்னுயிரை ஈந்த தேவசகாயத்தின் வரலாற்றைப் பாடுபொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட காப்பியம் திருத்தொண்டர் காப்பியம். இக்காப்பியத்தில் அமைந்துள்ள காப்பியக் கூறுகளை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.*

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6387

## காப்பியக் கூறுகள்

இலக்கிய வடிவங்களில் காப்பியமே சிறந்தது. தண்டியலங்காரம் பெருங்காப்பிய இலக்கணம் என்று எட்டுக் கூறுகளைக் குறிப்பிடுகிறது. அவை, தொடக்கம், உறுதிப் பொருள், தன்னிகரில்லாத் தலைவன், வருணனைத் திறன், இல்லறச் செய்தி, அரசியல் வினைகள், உட்பிரிவு, எண்சுவை ஆகியவை. இக்காப்பியக் கூறுகள் திருத்தொண்டர் காப்பியத்தில் அமைந்துள்ளன.

## காப்பியத் தொடக்கம்

காப்பியத்தின் தொடக்கத்தில் வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகியவற்றுள் ஏற்புடையன வரவேண்டும் என்கிறது தண்டியலங்காரம்.[1] மாறனலங்காரம் இம்மங்கலக் கூறுகளுடன் அவையடக்கமும் இடம்பெற வேண்டும்[2] எனக் கூறுகின்றது.

இதனடிப்படையில் காப்பியத்தின் பொதுவான இயல்புக்குரிய வகையில் இறைவாழ்த்து, வள்ளல் வாழ்த்து, அவையடக்கம், பாடுபொருள், வரலாறு ஆகியவற்றைக் கொண்ட பாயிரத்துடன் திருத்தொண்டர் காப்பியம் தொடங்குகிறது.

## வாழ்த்து

திருத்தொண்டர் காப்பிய வாழ்த்துப் பகுதியில் தந்தை, மகன், தூய ஆவி என மூவொரு கடவுள் வாழ்த்தாக, வாழ்த்துப் பாடல்கள் அமைந்துள்ளன.

அவை, திருவாளன் திருவடியைத் தொழுதே யான் தொடங்குகின்றேன் (1:1) என இறைத்தந்தையையும், கண்ணொளியான் திருமகனைத் கைத்தொழுது பாடுகின்றேன் (1:2) என இறைமகனையும், ஆவியினான் அடிபணிந்து அவனேவப் பாடுகின்றேன் (1:3) என்று தூய ஆவியையும், எந்தைமகன் ஆவியரை எழுதுமுனர் வணங்குகின்றேன் (1:4) என மூவொரு கடவுளை வாழ்த்தியும், வணங்கியும் தம் நூலைப் பாடத் தொடங்குகின்றார் ஆசிரியர்.

### காண்ட வாழ்த்து

ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் இறைவனை வாழ்த்திப் பாடுவது காண்ட வாழ்த்தாகும். இக்காண்ட வாழ்த்துப் பாடல் கம்பராமாயணத்தில் மட்டுமே உள்ளது. இன்னாசி அவர்கள், திருத்தொண்டர் காப்பியத்தின் ஒவ்வொரு காண்டத்திலும் காண்ட வாழ்த்துப் பாடலை அமைத்துள்ளார். காண்ட வாழ்த்து வேறு எந்தக் கிறித்தவக் காப்பியத்திலும் இல்லை. *(4:3131)*

### காப்புச் செய்யுள்

தான் செய்யும் செயலுக்கு எவ்வித இடையுறும் வராமல் காத்தருள வேண்டும் என இறைவனை வேண்டிப் பாடுவது காப்புச் செய்யுளாகும். இன்னாசி தமது காப்பியத்தின் ஒவ்வொரு படலத்திலும் காப்புச் செய்யுளைப் பாடியுள்ளார். அவற்றுள் ஆள்வினைப் படலத்தில் மூன்று காப்புச் செய்யுட்களும், மனையமை படலத்தில் இரண்டும், ஏனைய படலங்களில் ஒன்றும் அமைந்துள்ளமை திருத்தொண்டர் காப்பியத்தின் சிறப்பாகும். படலத்தில் விவரிக்கும் செய்தியைக் கோடிட்டுக் காட்டி, அது குறைவின்றி நிறைவேற இறைவனை வேண்டுகிறார்.

### வள்ளல் வாழ்த்து

வள்ளல் வாழ்த்து என்ற பகுதியை இன்னாசி அமைத்துள்ளார். இது வேறு எந்தக் காப்பியத்திலும் இல்லாத பகுதியாகும். சடையப்பர், கம்பருக்குப் பொருள் செல்வத்தைத் தான் அளித்தார். ஆனால் “இயேசு வள்ளல்” இன்னாசிக்கு விரைந்து எழுத அருட்செல்வத்தை அளித்தார். விண்ணுலக வேந்தனவன் என்றனுக்கு விரைந்தெழுத அருட்செல்வம்தனை அளித்தான். அண்ணலவன் இயேசுபிரான் தானே வள்ளல் ஆதலினால் அடிதொழுது நிறைவு செய்தேன். *(1:8)* எனப் பாடியுள்ளார்.

### அவையடக்கம்

நிறைந்த அறிவுடைய பெரும்புலவர், தம்மைக் குறைந்த அறிவுடையவர்களாக எண்ணிப் பேசும் மரபு உண்டு. அது அவையடக்கமாகும். பலாப்பழத்தின் சுவையைச் சுவைத்த சிறுகுருவி தன் சிறிய அலகால் முழு பலாப் பழத்தையும் கூட்டிற்குக் கொண்டு செல்ல முயற்றுதல் போல, திருத்தொண்டர் திருச்சரிதையாம் பலாவின் பழத்தைத் திருத்தமுற எழுத எண்ணுகிற தன்னை ஒரு குருவி என்று அடக்கமாகக் கூறிக் கொள்கிறார் ஆசிரியர். தம் பாக்களில் உள்ள பிழைகளைப் பொறுத்தருளவும் வேண்டியுள்ளார். *(1:9-10)*

### பாடுபொருள்

கவிஞன் சமுதாயத்திற்குத் தான் எதனைச் சொல்ல விரும்புகின்றானோ அதுவே அவன் படைக்கும் இலக்கியத்தின் பாடுபொருளாகும். இல்லறத்தில் ஈடுபட்டு, திருமறையைப் பின்பற்றிக் கிறித்துவுக்காக வாழ்ந்து, கொலை செய்யப்பட்டவர் தேவசகாயம். அவருடைய வாழ்வு திருத்தொண்டர் காப்பியத்தின் பாடுபொருளாக அமைகிறது. திருமறையைப் பின்பற்றும் குடும்பத்தாருள் அருள்தேவ சகாயந்தான் தலைவராவார். *(1:13)*

### உறுதிப் பொருள்

பெருங்காப்பியத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் அமைதல் வேண்டும் (தண்டி, நூ.8). திருத்தொண்டர் காப்பியம் நாற்பொருள் பயக்கும் நடைநெறியினது. வீடுபேற்றினை இலக்காக உடைய இக்காப்பியத்தில், அறமும், பொருளும், இன்பமும் இயல்பாக அமைந்துள்ளன.

### அறம்

திருத்தொண்டர் காப்பியத்தில் கதைப் போக்கின் வாயிலாகவே அறம் உரைக்கப்படுகிறது. காப்பியத் தலைவன் அரசுப்பணியில்

*சேர்வதைக் குறித்து பலரிடம் அறிவுரை கேட்கும் பகுதி, வேலையில் சேர்ந்த பின் மன்னர் காப்பியத் தலைவனுக்குக் கூறும் அறவுரை ஆகியன அறம் சார்ந்த பகுதிகளாக உள்ளன. மன்னர் கூறிய அறவுரைகள் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அறிந்து பின்பற்றத் தக்கனவாக அமைந்துள்ளன.*

### பொருள்

*பொருள் அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும். நன்னெறியில் பொருளை ஈட்டுதல் வேண்டும். ஈட்டிய பொருளைத் தான் மட்டும் வைத்துக் கொள்ளாமல் பிறருக்குக் கொடுத்தல் வேண்டும். எப்படிக் கொடுத்தல் வேண்டும் என்பதைத் (கொடுக்கும் பொழுது மகிழ்வாய்க் கொடுப்பீர் 2:1307) திருத்தொண்டர் காப்பியம் குறிப்பிட்டுள்ளது.*

### இன்பம்

*இன்பம் எல்லாராலும் விரும்பப்படுவது, இன்பத்தை விரும்பாத உயிர்கள் எது வுமில்லை. நீலகண்டன் பார்கவியுடன் ஊடியும் கூடியும் இன்பம் அனுபவித்தார். பார்த்தாலும் இன்பம் தருபவள் பார்க்காமல் நினைத்தாலும் இன்பம் தருபவள் எனத் தலைவியை எண்ணி, தலைவர் இன்பம் கொள்கின்றார். தேன் திகட்டும் திகட்டாத தேன் போன்றது காதல் இன்பம். (1:612)*

### வீடுபேறு

*காவியப் பயன் நாற்பொருள் பயத்தல். எனினும் இறுதிப் பொருளாகிய இறவாப் பேரின்பமே குறிக்கோள் பொருளாகும். முதல் மூன்று பொருள்களும் இம்முடிந்த குறிக்கோளை எய்துதற்கு உரிய சாதனங்கள் ஆகும். காப்பியங்களை உயர்வுடையதாக்கவும், புனிதமுடையதாக்கவும் காப்பியப் புலவர்கள் கண்டுபிடித்த உத்திதான் வீடுபேறு.[3]*

*தேவசகாயம் இறந்த போது காவலர் கூற்றாக வரும்,*

***வீடு வாசல் நமக்குண்டாம் ஆனால் அவற்கோ***
***விண்ணிலிடந் தனிலுண்டு என்று கண்டோம்***
***(4:3749)***

*என்ற அடி வீடுபேறு பற்றிய செய்தியைத் தெரிவிக்கின்றது.*

### தன்னிகரில்லாத் தலைவன்

*காப்பியத் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாக இருக்க வேண்டும் எனத் தமிழ், வடமொழிக் காப்பிய இலக்கணங்கள் ஒரே குரலில் கூறுகின்றன.[4]*

*நாட்டின் நலனுக்காகத் தன்னைத் தியாகம் செய்துவிடத் தயாராக இருப்பவனே நாட்டின் தொண்டன். அவனே தலைவனும் ஆவான்.[5]*

### இயற்கை வருணனை

*மலை, கடல், நாடு, நகர், பருவம், இருசுடர் தோற்றம் போன்ற இயற்கை வருணனைகள் காப்பியத்தில் இடம் பெறுதல் வேண்டும். புலவர்களின் ஆற்றலைக் காட்டும் ஓர் இடமாக வருணனைகள் காப்பியங்களில் அமைகின்றன.*

***மலைகடல் நாடு வளநகர்ப் பருவம்***
***இருசுடர்த் தோற்றம் என்றினையன புனைந்து***[6]

*என்று தண்டியலங்காரம் கூறுகிறது.*

#### மலை

*தண்ணீர் பெருக்கெடுக்க வழியமைக்கும் மலை, அதைக் கண்டு மனம் மகிழ அழகினை வழங்கும். நாளெல்லாம் புகழ் பேச இடங்கொடுக்கும் மலை என மலைவளம் கூறப்பட்டுள்ளது. காப்பியத் தலைவன் தேவசகாயம், கொலை செய்யப்பட காற்றாடி மலைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.*

***மலையென்றால் காற்றாடி மலையொன்றே என்றாகும்***
***மலைக்களத்தில் பலதந்த மாமகனின் திருப்பாட்டால் (4:3701)***

*என வரும் அடிகள் இதனைப் புலப்படுத்துகின்றன.*

## கடல்

காண்பதற்கு நீலநிறக் காட்சியை நல்கும் கருங்கடலும் மணற்பரப்பில் வெண்மையாகவே தோன்றும். வேண்டும் பொருளை ஈத்துவக்கும் நிதியம் கடல். நாட்டைக் காக்கின்ற அரணாகவும், கலங்கள் ஊர்ந்து செல்ல வழியாகவும், தாக்குபவர்களுக்குத் தடைக்கல்லாகவும் கடல் உள்ளது. தன்னுள்ளே பல உயிர்களை வாழ வைக்கின்ற கடல், நிலத்துயிர்க்கும் மீன்களை வழங்கி உதவும்.

**உடுப்பாக உலகிற்கே இருந்து காக்கும்**
**உள்ளியுணர் இன்பமெலாம் கடலால் தானே?**
**(1:71)**

## நாடு

காப்பியத்தின் வரையறைக்குத் தக்கவாறு வரிசைப்படுத்தித் தொடங்கிய ஆசிரியர் நாட்டுப் படலத்தில் குமரியெனும் பெயருடைய நாஞ்சில் நாட்டின் சிறப்பை வருணித்துள்ளார்.

**திங்களெதிர் கதிரவனை ஒன்றாய்க் காணத்**
**திசைமுகங்கள் இங்கன்றி வேறெங் குண்டு?**
**(1:19)**

என எட்டுப் பகுதிகளில் நாட்டுவளத்தை நயம்படக் கூறியுள்ளார்.

## நகர்

நகர வருணனையும் காப்பியத்தில் இடம் பெறுதல் மரபு. எனவே நகரப் படலத்தைப் பாடிய கவிஞர் அதில் நகர், தெரு, மனை ஆகியவற்றின் சிறப்புகளையும், மன்னர், மக்கள், சான்றோர் ஆகியோர் சிறப்புகளையும் கலைவளம், இருப்பிடங்கள், நிறுவனங்கள், ஒழுக்கநிலை முதலியவை குறித்தும் பாடியுள்ளார். (1:170)

## கார்ப் பருவம்

கார்காலத்தில் முல்லைக் கொடிகளில் மலர்கள் மலர்ந்து காடெங்கும் மணம் பரப்பும். வினை மேற்சென்ற தலைவன் கார்காலத்தில் ஊர் திரும்புவான். பிரிவால் வருந்தும் தலைவி, தலைவன் வரவை எதிர்பார்த்து ஆற்றியிருப்பாள். கார்காலத்தின் வரவால், ஆயர்களும் அவர்களால் வளர்க்கப்படும் கால்நடைகளும், எய்தும் துன்பநிலையை முல்லைத் திணைப்பாடல்கள் சித்திரிக்கின்றன. இத்தகைய முல்லைப் பருவநிலை குறித்தும், முல்லை மலர்களின் மலர்ச்சி குறித்தும், ஆயர்களின் தொழில் குறித்தும் ஆசிரியர் (1:113) வருணித்துள்ளார்.

## கூதிர்ப் பருவம்

குறிஞ்சித்திணைக்குரிய பெரும்பொழுது கூதிர்ப்பருவம். பெருமழைக்குப் பின் தோன்றும் பருவமாதலால் குளிர் பற்றிய செய்திகள் வருணனையாகப் புனையப்பட்டுள்ளன.

போருக்குச் சென்ற தலைவன்வினை முடித்துத் திரும்பி வருகின்றான். அவனுடைய தேரொலியைக் கேட்ட தலைவி மகிழ்கிறாள். ஆனால் தலைவன் தேரொலியை மற்றவர்களுக்காகச் சற்று நிறுத்த, அதனால் தலைவி மயங்கி விழுகின்றாள். தலைவன் வந்து தாங்குகின்றான். தலைவன் அணிந்திருந்த மாலையால் “உயிர் பெற்றாள். தலைவியால் தாங்க முடியாத கூதிர்ப் பருவம் என அப்பருவம் வருணிக்கப்பட்டுள்ளது. (1:117)

## கதிரவன் தோற்றம்

திருத்தொண்டர் காப்பியத்தில் கதிரவனின் தோற்ற வருணனை 16 பாடல்களில் அழகுற அமைந்துள்ளது. கதிரவன் காட்சி, காலமகள் கண்விழித்து, இமை திறந்து கணக்கற்ற உயிர்களைப் பார்க்கும் கண் போன்றது. அக்கதிரவன், செங்குழம்பில் கிழக்கு வானில் தீட்டிய ஓவியம், குங்குமம் கொட்டி விட்ட குழந்தையின் வாய் திறந்த சிரிப்பு, ஞாலத்தை ஒளி யேற்றும் விளக்கு, இருள் கடலாகிய உலைக்களத்தில் பழுத்துச் சிவந்த உருள் பெருந்தேர் சக்கரத்தின் பட்டையைப் போலவும், உருள்வட்ட வடிவம் ஆகவும் கதிரவன் கீழ்வானில் எழுகின்றான் எனப் பல உவமைகளை அடுக்கிச் செல்லும் கவிஞரின் வருணனை மிக அழகுற அமைந்துள்ளது. (1:80)

### நிலவின் தோற்றம்

நிலவின் தோற்றம் குறித்த வருணனை 21 பாடல்களில் அமைகின்றது. கடலோரத் தென்னந் தோப்பில் தென்னங் கீற்றுக் கிடையில் நிலவு தோன்றியும் மறைந்தும் ஒளி விடுகின்ற அழகைக் கவிஞர், காதலனைச் சன்னலிடை மறைந்திருந்து இரசிக்கும் காதலிக்கு உவமைப்படுத்தியுள்ளார்.

### அகத்துறைச் செய்தி

**காப்பியத்தில்அகத்துறைக் கூறுகளாகிய,**
**நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்**
**பும்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்**
**தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்**
**புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தல்[7]**

ஆகிய இல்லறச் செய்திகள் இடம்பெற வேண்டும் என்று தண்டியலங்காரம் கூறும். திருத்தொண்டர் காப்பியத்தில் இவை சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

### நன்மணம் புணர்தல்

காப்பியத் தலைவனும் தலைவியும் அன்பு வயப்பட்டு இணைந்து மணம் புரிதல், காப்பியத்தின் திரண்ட பொருள்களுள் ஒன்றாகிய இன்பத்தின் பகுதி. திருத்தொண்டர் காப்பியத்தில் காப்பியத் தலைவன் நீலகண்டனுக்கும் காப்பியத் தலைவி பார்கவிக்கும் நடந்த திருமணம் புனையப்பட்டுள்ளது. (1:457)

### பும்பொழில் நுகர்தல்

மகளிரும் ஆடவரும் ஒன்றுபட்டு இன்புறும் பொழில் விளையாட்டைப் புலவர்கள் பலவிதமாகப் பாராட்டுவார்கள். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் புகழ்மொழிகளால் பாராட்டி மகிழ்ந்து இன்பம் நுகர்வது பொழிலுறு படலமாகத் திருத்தொண்டர் காப்பியத்தில் அமைந்து ள்ளது. அப்பாடல்கள் அனைத்தும் இன்பச் சுவை பயப்பன. (1:435)

### புதல்வரைப் பெறுதல்

இன்பம் துய்த்த காதலர் அதன் பயனாக நன்மக்களைப் பெறுதலைக் கூறும் பகுதி இது. காப்பியத்தின் கதைக்கும் தொடர்புடையதாகும். இல்லற வாழ்க்கைக்கு நன்கலமாகிய மக்கட்பேறு இன்பத்தின் பயனாகவும், அறத்தின் கருவியாகவும் அமைகிறது. காப்பியத் தலைவனின் பிறப்பும், பெயர் சூட்டலும் கூறப்பட்டுள்ளன. (1:239)

### புலவியிற் புலத்தலும் கலவியிற் களித்தலும்

மலர்ச் சோலையில் உலாவும் தலைவன் தலைவியரிடையே நடைபெற்ற புலவிக் காட்சிகள் பொழிலுறு படலத்தில் இடம் பெறுகின்றன.

ஊடல் துன்பமாயினும் அதனால் எழும் சினம் இன்பமானது. ஊடலாலெழும் சினம் உண்மையன்று. ஆயினும் அதனால் எழும் இன்பம் உயர்வானது. கூடலுக்குத் தடை போலத் தோன்றினாலும் கூடலுக்கு வலு சேர்க்கும் முயற்சியாகும். (1:630)

### அரசியல் வினைகள்

மந்திரம் தூது செலவு இகல் வென்றி8 ஆகிய அரசியல் வினைகள் காப்பியத்தில் இடம் பெறுதல் வேண்டும். அதன்படி திருத்தொண்டர் காப்பியத்தில் அரசியல் வினைகள் இடம் பெற்றுள்ளன.

### மந்திரம்

மன்னர் தம் அமைச்சர்களுடன் அரசியல் நெறிமுறைகளை ஆராய்ந்து செயல்படும் வினைத்திறமே "மந்திரம்" எனப்படும்.

தளவாய் இராமையன், மன்னர் மார்த்தாண்ட வர்மாவுடன் வடநாட்டுப் போரைக் குறித்து, கலந்தாலோசனை செய்தார். அப்போது மன்னர், காலம் அறிந்து செய்தால், உலகமெல்லாம் கைக்கூடும். இல்லாவிடின், மக்கள் சாவதற்கான வழியாகும். எனவே, முதலில் காவலை மேம்படுத்த வேண்டும் என்றார். (1:793)

### தூது

பகையரசருடன் போர்த்தொடுக்க முற்படும் மன்னர், அப்போருக்கு முன்பாகத் தமது கருத்தைப் பகைவருக்குத் தெரிவிக்கத் தூது விடுதல் உண்டு.

தூது, காப்பியக் கதை ஓட்டத்தில் சில இடங்களில் காட்டப்படுகிறது. மார்த்தாண்ட வர்மாவின் படையுடன், தொடர்ந்து போரிட முடியாததால் பகைவர் தூதனுப்ப எண்ணினர். (2:1569)

### செலவு

படைவீரர்கள் போருக்குச் செல்லுதல் செலவு எனப்படும். திருத்தொண்டர் காப்பியத்தில் போர்க்களம் நோக்கிச் செல்லும் வீரர்களின் செலவு குறிக்கப்பட்டுள்ளது. வீரர்கள், கைகளில் வில்லை ஏந்திக் கொண்டு, கண்களில் செந்தீயுடன் வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்டு செல்லும் பொழுதே பகைவர் படை அஞ்சி ஓடியதாகப் பாடியுள்ளார். (2:1526)

### இகல்

போர் நிகழ்ச்சிகளைக் கூறுதல் இகல் எனப்படும். திருத்தொண்டர் காப்பியத்தில் போர்க்களக் காட்சிகளையும் மன்னரின் நால்வகைப் படைகளின் ஆற்றலையும் போர்க்களப் படலம் விளக்குகின்றது.

**படையெனில் மார்த்தன் படைகரிப் படையே**
**பாடையைத் தேடும் மாற்றலர் படையே**
**(2:1493)**

என மார்த்தாண்ட வர்மாவின் படை சிறப்பிக்கப்பட்டுள்ளது.

### வென்றி

போரில் வெற்றி பெறுதலைக் கூறுதல் வென்றி ஆகும். காப்பியத் தலைவனது வெற்றியை விரித்துக் கூறிப் பாராட்டும் பகுதி இதுவாகும். நீலகண்டன் போர்க்களத்தில் நால்வகைப் படைகளின் துணைக் கொண்டு திறம்படப் போர் செய்ததும், மார்த்தாண்ட வர்மா, போரை நடத்திச் சென்றடிலனாய் ஆகியோரின் ஆற்றல்களும் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தன. (2:1512)

### உட்பகுப்பு

காப்பியக்கதை, தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு பகுதியாக அமையாமல் பல பகுதிகளின் தொகுதியாக அமைகின்றது. காப்பியக்கதையோட்டத்திற்குவாய்ப்பாகவும், விளக்கமாகவும் அமையும் இலக்கியப் பகுப்பு முறை பற்றி இலக்கணங்களும் நினைத்தன.[9]

**சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்**
**பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி[10]**

என்கிறது தண்டியலங்காரம்.

திருத்தொண்டர் காப்பியம் காண்டம் - படலம் என்று அமைந்துள்ளது. திருத்தொண்டர் காப்பியத்தில் 4 காண்டங்களும், 40 படலங்களும் அது நுவல்கின்ற பொருள் அமைதியால் பெயர் பெறுகின்றன. படலத்தின் தொடக்கத்தில் இன்னப் பொருளைப் பற்றித் தான் பேசப் போகின்றது என்ற குறிப்பு காணப்படுகிறது.

### எண் சுவைகள்

**நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்**
**கற்றோர் புனையும் பெற்றிய தென்ப[11]**

பல்சுவை அமைந்த வாழ்வின் உணர்வு வெளிப்பாடாக இலக்கியம் அமைவதால் வாழ்வின் சுவை நிலைகள் காப்பியத்திலும் அமைவது இயல்பு.12

நீலகண்டன் கருவுலத் தணிக்கை செய்த போது, சிலர் எழுதிய கணக்குகளை விசாரித்தார். அவர்கள் கூறிய பதில்கள் நகைச்சுவையை ஏற்படுத்தின. பொய் மேலே பொய் சொல்லும் பொல்லாரைக் கண்டு நீலகண்டன் நகைத்தார். (2:1027)

காப்பியத் தலைவி பார்கவி திருமணச் சீதனமாகக் கொண்டு வந்து, அன்பாக வளர்த்த பசு, இறந்து போனதால் அழுதாள். நீலகண்டனும் அழுதார். (2:2027)

காப்பியத் தலைவன் நீலகண்டன் அரசப் பதவியில் இருந்து நாட்டுக்காக உழைத்தும்,

ஆற்றல் மிகு போர் வீரராகத் திகழ்ந்தும், கிறித்தவ சமயம் தழுவியதாலே எருமை வலம் வரச் செய்து அவரை இழிவுப்படுத்தினர். *(3:2621)*

தேவசகாயம் எருமை வலத்தின் போது களைத்து நீர் வேட்கை மிகுதியால் பாறையின் மீது விழுந்தார். முகத்தில் அடிபடாமல் இருக்க, தம் கை மூட்டினைப் பாறையில் ஊன்றினார். அந்த இடத்தில் நீரூற்று தோன்றியது. பாறையில் தோன்றிய நீரூற்றைக் கண்ட மக்கள் அனைவரும் இது புதுமையான செயல் என வியந்தனர். *(3:2928)*

தேவ சகாயத்தைக் கொல்வதற்காகக் காற்றாடி மலைக்கு அழைத்துச் சென்ற போது, காவலர்களிடம் இருந்த வீரம், அவரைச் சுட்டுக் கொன்ற பின் இல்லாமல் போயிற்று. அவர் இறந்ததும், இவர்களைப் பயம் பிடித்துக் கொண்டது. இறைவனது கோபம் தங்களைத் தாக்கும் என்று எண்ணி அங்கிருந்து ஓடிவிட்டனர்.

காப்பியத் தலைவன் நீலகண்டன், வில் பயிற்சி, வாள் பயிற்சி, வீரர்களுக்குத் தேவையான பயிற்சி, சொற்பயிற்சி, இசைப் பயிற்சி, கலைப் பயிற்சி, பாடல் பயிற்சி, ஆடல் பயிற்சி ஆகிய பயிற்சிகளைப் பெற்றதால் அவர்தம் கல்வியின் சிறப்பு பெருமிதச் சுவையாக வெளி ப்பட்டுள்ளது. *(2:1782)*

கிறித்தவ சமயத்தை விட்டு மீண்டும் தம் சமயத்தைத் தழுவும்படி, எவ்வளவு சொல்லியும் தம் கொள்கையை விடாத தேவசகாயத்தின் மேல் மக்கள் வெகுண்டனர். சினம் கொண்டு அவருக்குச் சாபமிட்டனர். தங்கள் ஊரையும், பழம்பெருமைகளையும் கெடுத்து விட்டதாகக் கோபம் கொண்டனர். *(3:2258)*

தேவசகாயம் சிறையில் இருந்தபொழுது தம் மனைவி கிறித்தவ சமயத்தைத் தழுவினாள் என்பதைக் கேட்டு மகிழ்ந்தார். சிறைத் தண்டனை பெற்றிருந்தாலும் சிறையிலிருப்போருக்குத் திருமறையை அறிவிக்கும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தார். நாவற்கனியின் தோல் கறுப்பாக இருந்தாலும் உள்ளே சிவப்பாக இருப்பது போல, காவலர்களும் உள்ளே வெளுப்பாக நல்லவர்களாக இருப்பதை எண்ணி மகிழ்ந்தார்.

### காப்பிய இறுதி

“தொடக்கம் எவ்வளவு சுவையாக அமைய வேண்டுமோ அவ்வளவு சுவையாக முடிவும் அமைய வேண்டும். காப்பியத் தினைப் படித்து முடிக்கும் போது இப்படி முடித்து விட்டாரே என ஏங்கும் அளவிற்கு முடிந்தால் படிப்பவனின் நெஞ்சம் காப்பிய நினைவில் துள்ளும். தமிழ்க் காப்பியங்களில் இத்தகைய முடிவு மங்கலமாகவே உள்ளது.”[13]

இறை மன்றாட்டு, ஆடல், பாடல், நன்றி செலுத்துதல் ஆகியன நடைபெற்றன. வாழ்த்து, போற்றல், புகழ்ச்சி, அருள் வேண்டல், மகிழ்ச்சி, காக்க வேண்டுதலோடு காப்பியம் நிறைவடைகிறது.

### முடிவுரை

இலக்கண நூல்கள் கூறும் காப்பிய இலக்கணம் பொருந்துமாறு அமைந்துள்ள திருத்தொண்டர் காப்பியத்தில் காண்ட வாழ்த்து, காப்புச்செய்யுள், வள்ளல்வாழ்த்து ஆகியன அமைந்துள்ளமை சிறப்பம்சம் ஆகும். வாழ்வியல் விழுமியங்களை எளிய நடையில் பொருள் புரியுமாறு காப்பியப் பாங்கிற்குரிய தன்மையில் இக்காப்பியம் எடுத்துரைக்கிறது.

### அடிக்குறிப்பு

1. தண்டியலங்காரம், நூ.9
2. மாறனலங்காரம், நூ.72
3. சோ.ந. கந்தசாமி, காப்பியக் குறிக்கோள், ப.24
4. எஸ். சௌந்தரபாண்டியன், தமிழில் காப்பியங்கள், ப.124
5. அ.வெ.சுப்பிரமணியன், கம்பன் காப்பிய கதைமாந்தர் கூற்று, ப.131
6. தண்டியலங்காரம், நூ.8

7. தண்டியலங்காரம், நூ.8
8. மேற்படி, நூ. 8
9. ச.வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன், ப.50
10. தண்டியலங்காரம், நூ.8
11. மேற்படி, நூ.8
12. ச. வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன், ப.337
13. சோம. இளவரசு, காப்பியத் திறன், ப.86

## துணைநூல் பட்டியல்

1. இளவரசு, சோம., காப்பியத் திறன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
2. இன்னாசி, சூ., திருத்தொண்டர் காப்பியம், காவ்யா வெளியீடு, சென்னை.
3. கந்தசாமி, சோ. ந., காப்பியக் குறிக்கோள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
4. சுப்பிரமணியன், அ. வெ., கம்பன் காப்பிய கதைமாந்தர் கூற்று, தமிழரங்கம் வெளியீடு, புதுச்சேரி.
5. சுப்பிரமணியன் ச. வே., காப்பியப் புனைதிறன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.
6. சௌந்தரபாண்டியன், எஸ்., தமிழில் காப்பியங்கள், ஸ்டார் பிரசுரம், ஆர்க்காடு.
7. தண்டியாசிரியர், தண்டியலங்காரம், பதினான்காம் பதிப்பு, கழக வெளி யீடு, சென்னை.
8. நாராயணையங்கார், (ப.ஆ) மாறனலங்காரம், செந்தமிழ் பிரசுரம், சென்னை.